பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 03 2025 **FRIDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேவ்ஸ் மாநாடு உலக ஊடகத்துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துக் செல்லும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. தேசிய கல்விக் கொள்கை தாய்மொழி மேம்பாட்டிற்கு வழிவகுப்பதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு.அர்ஜூன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

3. ஹோலிப் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மக்களுக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. சத்திஷ்கர் மாநிலத்தில் பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த 17 நக்ஸல் தீவிரவாதிகள், மத்திய ரிசர்வ் காவல்படையினரிடம் சரணடந்தனர்.

5. உலக பாரா கிராண்ட் பிரிக்ஸ் தடகள போட்டியில் இந்தியா 45 தங்கம் உள்ளிட்ட 134 பதக்கங்களை வென்று முதலிடத்தை பிடித்தது.

>>>>>><<<<<<

மும்பையில் வரும் மே மாதம் நடைபெறவுள்ள வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி – ஒளி பொழுதுபோக்கு மாநாடு, உலக ஊடகத்துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துக் செல்லும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், படைபாற்றல், ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் நிபுணர்கள் சந்திக்கும் இந்த நிகழ்ச்சி, தரமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் உருவாக வழிவகுக்கும் என்று கூறினார்.

மே மாதம் ஒன்றாம் தேதி முதல் 4ஆம் தேதிவரை நடைபெறும் வேவ்ஸ் மாநாடு, உலகளாவிய படைபாற்றல் பொருளாதாரத்தை உயர்த்த வழிவகுக்கும் என்பதால், இதுசம்பந்தமான துறையைச் சேர்ந்த அனைவரும் இந்த மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

படைப்பாற்றல் பொருளாதாரத்திற்காக நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் இளம் படைப்பாளிகள் தங்களது படைப்புகளுக்கான முதலீடுகளை இதிலிருந்து பெற முடியும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தகவல் ஒலிப்பரப்புத்துறை இணையமைச்சர் டாக்டல் எல். முருகன், மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

தமிழக அரசு தாக்கல் செய்யவுள்ள பட்ஜெட் ஆவணங்களிலிருந்து அதிகாரப்பூர்வ ரூபாய் குறியீட்டை மாற்றியிருப்பது கண்டனத்திற்குரியது என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

திமுகவுக்கு உண்மையிலேயே ரூபாய் குறித்த தற்போதைய குறியீட்டில் பிரச்சினை இருந்தால், 2010ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தபோது இந்த குறியீடு ஏற்றுக் கொள்ளப்பட்ட போது ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று அவர் சமூகவலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வடிவமைத்த இந்த சின்னத்தை அகற்றுவதன் மூலம் திமுக அரசு தேசிய சின்னத்தை நிராகரிப்பது மட்டுமல்லாமல், தமிழக இளைஞரின் படைப்பாற்றலையும் புறக்கணிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

திமுக அரசின் இந்த செயல், பிரிவினை உணர்வை பரப்பும் ஆபத்தான மனநிலையை குறிப்பதாக திருமதி. நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய கல்விக் கொள்கை தாய்மொழி மேம்பாட்டிற்கு வழிவகுப்பதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கையில் மாநில மொழிகள் மற்றும் அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழிகளை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழ் போன்ற பாரம்பரிய மொழிகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, திரு. அர்ஜுன்ராம் மெக்வாலை, புதுச்சேரி சட்டப்பேரவை தலைவர் திரு. ஆர். செல்வம் மற்றும் பிஜேபி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேசினர்.

>>>>>><<<<<<

சத்திஷ்கர் மாநிலத்தில் பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த 17 நக்ஸல் தீவிரவாதிகள், மத்திய ரிசர்வ் காவல்படையினிரிடம் சரணடைந்தனர்.

பிஜப்பூரில் மத்திய ரிசர்வ் காவல்படையின் உயரதிகாரிகள் முன்னலையில இவர்கள் சரணடைந்ததாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மனிதாபிமானமற்ற சித்தாந்தம், ஏராளமான பழங்குடி மக்களை சுரண்டுவதாகவும், இதன்காரணமாக தாங்கள் அந்த அமைப்பிலிருந்து விலகுவதாகவும் சரணடைந்த நக்ஸல் தீவிரவாதிகள் கூறியதாக பிஜப்பூர் மாவட்டகாவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜிதேந்திரகுமார் யாதவ் கூறினார்.

நக்ஸல் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் மாநில அரசின் சார்பில் அடிப்படை வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அரசு நடவடிக்கைகளால் தீவிரவாதிகள் ஈர்க்கப்பட்டு சரணடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வசந்த காலத்தை வரவேற்கும் ஹோலிப் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணப்பொடிகளையும், வண்ணம் கலந்த நீரையும் தெளித்து கொண்டாடி வருகின்றனர்.

இவ்விழாவை ஒட்டி தலைவர்கள் பலரும் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கும் வண்ணமயமான பண்டிகை என்று கூறியுள்ளார்.

ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் மக்களின் மனதில் வளர்க்கும் திருநாளாகவும் ஹோலிப்பண்டிகை திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹோலியின் பல்வேறு வண்ணங்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வை காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்பையும், நேர்மறையான சிந்தனையையும் மக்களிடையே வளர்க்கும் ஹோலி பண்டிகை என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், ஹோலிப்பண்டிகை முன்னேற்றத்திற்கான புதிய தொடக்கம் என்று கூறியுள்ளார்.

இளவேனில் காலத்தில் தொடங்கியுள்ள இந்த பண்டிகை, தீமையை நன்மை வென்றதன் அடையாளமாக திகழ்கிறது என்றும் கூறியுள்ளார்.

ஹோலிப் பண்டிகையையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும், புதிய ஆற்றலையும் அளிக்கும் பண்டிகையாக ஹோலி கொண்டாடப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் புதிய ஆற்றலை அளித்து, ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தும் நாளாக ஹோலிப் பண்டிகை திகழ்கிறது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழக அரசின் 2025-26ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

பொருளாதார ஆய்வறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் மாநிலத்தின் தற்போதைய பொருளாதார நிலை குறித்து பல்வேறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

இன்று தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு கூடி, சட்டப்பேரவை கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்று முடிவெடுக்கவுள்ளது.

பட்ஜெட் குறித்த நேரலையை பொதுமக்கள் காண்பதற்கு 100 இடங்களில் டிஜிட்டல் திரைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரின் மறுசீரமைப்பை தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர் - லடாக் யூனியன் பிரதேசங்களுக்கு இடையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்து கொள்வது தொடர்பாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், ஜம்மு காஷ்மீரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்து விரிவாக ஆய்வு நடத்திய பின்னர், இந்த குழுவின் அறிக்கை அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும் என்று கூறினார்.

இந்தக் குழு நியாயமான பரிமாற்றத்தை உறுதி செய்யும் வகையில் நடந்து கொள்ளும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொதுக்கடனை பொறுத்தவரை 2 ஆயிரத்து 504 கோடி ரூபாய் லடாக் யூனியன் பிரதேசத்தின் பொறுப்புக்கு மாற்றப்படவுள்ளதாகவும் திரு. உமர் அப்துல்லா கூறினார்.

**>>>>>><<<<<<**

ஆர்எஸ்.எஸ். அமைப்பின் மூத்த நிர்வாகி **Shankar Rao Tatwawadi** மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியாவின் கலாச்சார மறுமலர்ச்சிக்கும், தேசத்தை உருவாக்குவதற்கும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரோடு தாம் பலமுறை கலந்துரையாடியுள்ளதையும் பிரதமர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, அந்த அமைப்பிற்கு உலகளாவிய அடையாளத்தை உருவாக்கியவர் **Shankar Rao Tatwawadi** என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

உதகையில் சிறுத்தை தாக்கி பெண் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து 3 நாட்களுக்கு தேயிலை பறிக்க செல்ல வேண்டாம் என்று தொழிலாளர்களை வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

மைனலை அரக்காடு பகுதியில் நேற்று தேயிலை பறிக்கச் சென்றபோது, பெண் ஒருவர் சிறுத்தை தாக்கி உயிரிழந்தார்.

சிறுத்தை நடமாட்டம் இருப்பதை உறுதி செய்த வனத்துறையினர் அதனை பிடிக்க கூண்டு அமைத்தும் 10 கேமிராக்களை பொருத்தியும் அதன் நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் பத்திரப் பதிவுத்துறைக்கு இதுவரை இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு 20 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

2023-24ஆம் நிதியாண்டில் 18 ஆயிரத்து 800 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

அதைவிட தற்போது ஆயிரத்து 200 கோடி ரூபாய் அதிகமாக கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டு 33 லட்சம் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு இதுவரை 32 லட்சம் பத்திரங்கள் பதிவு செய்யபபட்ட போதிலும், வருவாய் அதிகரித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உலக பாரா கிராண்ட் பிரிக்ஸ் தடகள போட்டியில் இந்தியா 45 தங்கம் உள்ளிட்ட 134 பதக்கங்களை வென்றுள்ளது.

புதுதில்லியில் நேற்று முடிவடைந்த இப்போட்டியில் இந்தியா 40 வெள்ளி, 49 வெண்கலப்பதக்கங்களை கைப்பற்றியது.

தடகளத்தில் இந்தியா தனது முழுத்திறனையும் வெளிப்படுத்தியதால், அதிக பதக்கங்களை வெல்ல முடிந்தது.

பெரும்பாலான போட்டிகளில் இந்திய அணியினர் ஆதிக்கம் செலுத்தினர்.

>>>>>><<<<<<

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டியில், மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Treesa Jolly** – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 15-21, 21-18, 21-18 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் **Kong – Hee Yong – Kim Hye Jeong** இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் **Treesa Jolly** – காயத்ரி கோபிசந்த் இணை, சீனாவின் **Tan Ning – Liu Shengshu** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் மும்பை அணி 47 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

மும்பையில் நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மும்பை – தில்லி அணிகள் மோதுகின்றன.

**>>>>>>END<<<<<<**